ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜார்க்கண்ட் சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, Ol Chiki இயக்கம் குறித்த ஏடுகளின் நூற்றாண்டு நிறைவு விழாவை தொடங்கி வைத்தார்.

2. புதுச்சேரியில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ், புதிய குடியிருப்புகளுக்கான சாவிகளை குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று வழங்கினார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், மாநிலங்களுக்கான ஒட்டுமொத்த நிதி விநியோகத்தை மேம்படுத்தும் என்று பாரத ஸ்டேட் வங்கி கூறியுள்ளது.

4. வடகொரியா, நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணை சோதனையை மேற்கொண்டுள்ளது.

5. 17வது இளையோர் Roll Ball தேசிய சாம்பியன் போட்டிகள் இன்று ஜம்முவில் தொடங்குகிறது.

>>>>>>>><<<<<<<<

ஜார்கண்ட் மாநிலத்திற்கு மூன்று நாள் பயணமாக நேற்று ராஞ்சி சென்றடைந்த குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

முதலில், Karandia பகுதியில், Ol Chiki இயக்கம் குறித்த ஏடுகளின் நூற்றாண்டு நிறைவு விழாவை அவர் தொடங்கி வைத்தார்.

1925ஆம் ஆண்டு Ol Chiki இயக்கம் குறித்த ஏடுகளை எழுதிய பண்டிட் ரகுநாத் முர்மு-வுக்கும் குடியரசுத் தலைவர் மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின், ஜம்ஷெட்பூரில் உள்ள தேசிய தொழில்நுட்ப கல்லூரியின் 15வது பட்டமளிப்பு விழாவில் திருமதி. திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

>>>>>>>><<<<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று ஒரு நாள் பயணமாக புதுச்சேரி வந்துள்ளார்.

விமான நிலையம் வந்த அவரை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு. செல்வம் மற்றும் மாநில அமைச்சர்கள் வரவேற்றனர்.

சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ், குமரகுருபள்ளத்தைச் சேர்ந்த மக்களுக்கு புதிய குடியிருப்புகளுக்கான சாவிகளை அவர் வழங்கினார்.

பின்னர், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 30வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

இன்று மாலை கேரளா செல்லவுள்ள அவர், அம்மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் நடைபெற உள்ள கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

நாளை கேரள செல்லும் குடியரசு துணைத்தலைவர், வர்கலாவில் நடைபெறும் 93வது சிவகிரி யாத்திரையில் பங்கேற்கவுள்ளார்.

பின்னர் திருவனந்தபுரத்தில் உள்ள மார் இவானி யோஸ் கல்லூரியின் பவள விழா கொண்டாட்டத்தின் நிறைவு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்கிறார்.

நாளை மாலை ராமேஸ்வரம் செல்லும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அங்கு நடைபெறவுள் காசி தமிழ்ச் சங்கமம் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

>>>>>>>><<<<<<<<

உத்ராகண்டில் மாநில அளவில் நடைபெறும் விவசாயிகள் தின நிகழ்ச்சியில், மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் இன்று பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில், அம்மாநிலத்தின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகளுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

இந்நிகழ்ச்சி மாநிலம் முழுவதிலும் உள்ள 95 தாலுகா-க்களிலும் நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

Chamoli மாவட்டத்தில் உள்ள Gauchar-ல் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை மத்திய வேளாண்துறை இணையமைச்சர் திரு. கணேஷ் ஜோஷி நேற்று பார்வையிட்டார்.

விவசாயிகள் தின விழா குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் திரு. Pushkar Singh Dhami கலந்து கொள்ளவிருப்பதாகவும் திரு. கணேஷ் ஜோஷி கூறினார்.

>>>>>>>><<<<<<<<

மத்திய அரசு கொண்டு வந்துள்ள, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், மாநிலங்களுக்கான ஒட்டுமொத்த நிதி விநியோகத்தை மேம்படுத்தும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை விட, புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள GRamG திட்டத்தின் நடைமுறைகள், பெரிய அளவில் மாற்றத்தை கொண்டு வரும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

*ஊரக மேம்பாட்டுக்கான வளர்ச்சித் திட்டங்களை இறுதி செய்வது, ஆக்கபூர்வமான சொத்துக்களை உருவாக்குவது, உயர்த்தப்பட்ட ஊதியம், திறன்மிக்க கண்காணிப்பு கட்டமைப்பு ஆகியவை புதிய திட்டத்தின் முக்கிய அம்சங்கள் என்றும் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.*

*வெளிப்படைத் தன்மையுடன் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், திட்டமிடல் ஆகியவை உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அனைத்து நிலைகளிலும் முறையான கணக்குப் பதிவு மற்றும் பொறுப்புகளை பராமரிக்கும் வகையில், GRamG திட்டம் அமைந்துள்ளதாகவும் பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கை கூறுகிறது.*

*>>>>>>>><<<<<<<<*

*மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், நாடுமுழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*தமிழகத்தின், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பயனாளிகள், புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள VB-GRamG திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்துள்ளனர்.*

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் 39 செகண்ட்ஸ்)*

*>>>>>>>><<<<<<<<*

*கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகள் மற்றும் நீர்நிலைகளில் பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.*

*இந்த கணக்கெடுப்பின் அடிப்படையில், பறவைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மாவட்ட வனத்துறை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – ராஜா 63 செகண்ட்ஸ்)*

*>>>>>>>><<<<<<<<*

*நாட்டின் வடமாநிலங்களில் நிலவும் கடுமையான பனிப்பொழிவு காரணமாக, விமான மற்றும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.*

*தில்லி ரயில்வே கோட்டம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தில்லிக்கு வரும் மற்றும் அங்கிருந்து புறப்படும் 18க்கும் மேற்பட்ட ரயில்கள், மூன்று மணி நேரம் காலதாமதமாக இயக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தில்லி விமான நிலையத்திலிருந்து புறப்படும் 64 விமானங்கள், இன்று ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், விமான சேவை மாற்று ஏற்பாடுகள் குறித்து அவ்வப்போது வெளியாகும் தகவல்களை பயணிகள் கண்காணிக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.*

*ஏர் இண்டியா, இண்டிகோ, ஸ்பைஜெட் விமான நிலையங்களும் மாற்று விமான சேவை குறித்த அறிவிப்புகளுக்காக காத்திருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளன.*

*பயணிகள் முன்கூட்டியே விமான நிலையத்திற்கு வந்திருந்து, தங்களது பயணத்தை தொடர்வதற்கான ஏற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு தருமாறும் விமான நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.*

*>>>>>>>><<<<<<<<*

*இலங்கையில் டிட்வா புயல் மற்றும் நிலச்சரிவால் ஏற்பட்ட பாதிப்புகளை அடுத்து, பிரகடனப்படுத்தப்பட்ட அவசர நிலை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டித்து, அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே உத்தரவிட்டுள்ளார்.*

*இதுதொடர்பாக அரசிதழில் அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், மக்களின் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தடையின்றி கிடைக்கும் வகையில், அவசர நிலை நீட்டிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது*

*ராணுவமும், மீட்பு மற்றும் நிவாரண குழுக்கள் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.*

*ஊடகம் உட்பட 12 சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக இந்த உத்தரவில் இடம்பெற்றுள்ளன.*

*>>>>>>>><<<<<<<<*

*வடகொரியாவை ஒட்டிய கடற்பகுதியில், நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணை சோதனையை அந்நாடு மேற்கொண்டுள்ளது.*

*இதனை அதிபர் திரு,* Kim Jong-un *பார்வையிட்டார்.*

*>>>>>>>><<<<<<<<*

*17வது இளையோர் Roll Ball தேசிய சாம்பியன் போட்டிகள் இன்று ஜம்முவில் தொடங்குகிறது.*

*26 நாடுகளைச் சேர்ந்த 600-க்கும்மேற்பட்ட வீரர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.*

***>>>>>>>>END<<<<<<<<***